இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

சனிக்கிழமை 25.07.2026

# கேவலம்! மகா கேவலம்!

**ஓடாத படத்தை உட்கார வைத்து பார்க்கச் சொல்வதால் வேதனை தாங்காமல் அழுகிறார்கள் அமைச்சர்கள்.**

டெல்லி முதல் சென்னை வரை நீட் தேர்வுக்கு எதிராக மகத்தான போராட்டங்கள் நடந்து வரும்போது, தனது படம் வெளியாவது மட்டும்தான் தனக்கு முக்கியம் என்று முதலமைச்சர் விஜய் மகிழ்ந்துகொண்டிருக்கிறார்.

**தினமும் பாலியல் வன்கொடுமைகள் - போதைப் பொருட்கள் நடமாட்டம் - கொலைகள் - கொள்ளைகள் - கனிம வளங்கள் திருட்டு - ஊழல்கள் - லஞ்சம் வாங்கி த.வெ.க. நிர்வாகிகள் மாட்டிக் கொள்வது - கோவில் சொத்தை ஆட்டையைப் போடுவது - அரசு வழக்கறிஞர் நியமனத்தில் லஞ்சம் - டாஸ்மாக் கடைகளை மூடுவதைப் போல மூடி ‘எலைட் பார்’களாகத் திறந்தது - காவல் நிலைய மரணங்கள் - ஆணவக் கொலைகள் - தினமும் தலைமைச் செயலகம் வந்து தூங்கிவிட்டுச் செல்வது - எந்த அரசாணைகளையும் போடாமல் பழைய திட்டங்களின் பெயரை மட்டும் நீக்குவது என, மக்களுக்குச் சம்பந்தமில்லாத ஒரு அரசாங்கத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கும் விஜய், இதனை மறைக்கவே தனது படத்தை ரிலீஸ் செய்திருக்கிறார்.**

ஆறு சிலிண்டர் இலவசம் என்று சொன்னதை மறக்க வேண்டாமா? மகளிருக்கு மாதம் 2500 ரூபாய் என்பதை மறக்க வேண்டாமா? திருமணத்தின்போது 8 கிராம் தங்கம், பட்டுப்புடவை என மாமன் சீரை மறக்க வைக்க வேண்டாமா? மூத்த குடிமக்களுக்கு மாதம் 3000 என்பது நினைவுக்கு வரக்கூடாது. வேலை இல்லாப் பட்டதாரிகளுக்கு மாதம் 4000 ரூபாய் என்று சொன்னது நினைவுக்கு வரக்கூடாது. அதற்காக மீண்டும் சினிமா போதையை ஊட்டித் தூங்க வைக்கப் பார்க்கிறார்.

**‘ஜனநாயகன்’ என்ற சொல்லைச் சொல்வதற்கு அவருக்கு யோக்கியதை இருக்கிறதா? ஜனநாயகப் பூர்வமாகப் போராடும் இளைஞர்கள், மாணவர்கள், மாணவியரை லத்தியாலும் குண்டாந்தடியாலும் தாக்கித் தரதரவென இழுத்து போலீஸ் வாகனத்தில் ஏற்றிக் கொண்டிருக்கிறது விஜய் போலீஸ். சாலையில் திரண்டால் கைது என்பதைத் தாண்டி, கல்லூரிகளுக்குள் - கல்லூரி விடுதிக்குள் சென்று மாணவர்களைக் கைது செய்கிறது விஜய் போலீஸ். டெல்லியைப் போலவே ‘நேம் போர்டு’களை எடுத்து விட்டு வந்து போலீஸார் அராஜகம் செய்கிறார்கள். போராடும் உரிமையைக்கூட பறித்துவிட்ட விஜய்க்கு ‘ஜனநாயகன்’ என்ற பெயர் ஒரு கேடா?**

அரசாங்கத்தைப் பற்றி, முதலமைச்சரைப் பற்றி, அமைச்சர்கள் பற்றி சிறு விமர்சனம் செய்தாலே உடனே கைது. “அரசை, அமைச்சர்களை விமர்சிப்பது பொது அமைதிக்கு எதிரான குற்றம் ஆகாது. சமூகத்துக்கு இடையிலான பகை, வெறுப்பை விதைப்பதாகக் கூற முடியாது” என்று விஜய் தலையில் கொட்டி இருக்கிறது சென்னை உயர்நீதிமன்றம்.

100 கோடி ரூபாய் மதிப்பிலான பழனி கோவில் சொத்தை 2 கோடி ரூபாய்க்கு தனியாருக்குத் தாரை வார்த்த அறநிலையத் துறை அமைச்சர் ரமேஷை விமர்சித்துப் பதிவு போட்ட வினோத் சூர்யா என்பவரைக் கைது செய்தார்கள். அவரைப் பிணையில் விடுதலை செய்யச் சொன்ன உயர்நீதிமன்றம்தான் இத்தகைய அறிவுரையைக் கூறியுள்ளது. யார் பதிவு போட்டாலும் கைது செய்யும் விஜய், ‘ஜனநாயகன்’ என்ற சொல்லை உச்சரிக்கலாமா?

தேர்தலுக்கு முன்னதாக இணையத்தில் அவர்களாகவே படத்தை வெளியில் விடுகிறார்கள். வெளியில் யாரோ விட்டு சதி செய்ததாக ஒப்பாரி வைக்கிறார்கள். இதற்குக் காரணம் என்று ஒருவர் கைது செய்யப்படுகிறார். விஜய் கையில் ஆட்சி வந்ததும் அந்த நபர் விடுதலை செய்யப்படுகிறார். படத்தின் தயாரிப்பாளருக்கு தமிழ்நாட்டின் பிரதிநிதியாக டெல்லியில் பதவி தரப்படுகிறது. படம் மீண்டும் வெளியாகிறது.

வாக்களித்த ரசிகனுக்கு தனது கடைசிப் படத்தில் கூட நன்மை செய்தாரா என்றால் இல்லை. 200 ரூபாய் டிக்கெட் 2000 ரூபாய் வரைக்கும் விற்கப்பட்டுள்ளது. பட்டப்பகலில் முதலமைச்சர் பெயரைச் சொல்லி ‘கொள்ளையோ கொள்ளை’ நடந்துள்ளது. சில இடங்களில் திரையரங்குகளிலேயே 500க்கும் 600க்கும் விற்கப்பட்டுள்ளது. அரசு நிர்ணயித்துள்ள கட்டணத்தை விட பல மடங்கு அதிகமாக விற்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தைக் கையில் வைத்துள்ள விஜய் தனது ரசிகர்களின் பாக்கெட்டுகளையே சூறையாடி இருக்கிறார். ‘ஆன்லைனில் டிக்கெட்டுகள் இருப்பதுபோலக் காண்பித்தாலும் டிக்கெட்டுகளை எடுக்க முடியவில்லை’ என்றும் சில ஊர்களில் புகார்கள் வந்துள்ளன.

**“டிக்கெட்டுக்கு அதிக விலை கேட்டால் உங்க அண்ணனிடம் சொல்லுங்கள் என்னும் குரல் ஏன் இன்னும் வரவில்லை?” என்று எழுத்தாளர் ஆதவன் தீட்சண்யா கேட்டுள்ளார். தனது தொழிலில், தனது படத்தில், தனது ரசிகர்களுக்குத் துரோகம் இழைத்திருக்கிறார் விஜய். தனது கடைசிப் படத்தில்கூட துளி நன்மையும் செய்யவில்லை விஜய்.**

ஓடாத படத்தைப் பார்க்க ஒட்டுமொத்த தமிழ்நாடு அமைச்சரவையும் தியேட்டருக்கு ஓடி இருக்கிறது. தலைமைச் செயலகமே வெறிச்சோடியது. தாங்கள் படம் பார்க்கும் காட்சியை தாங்களே எடுத்துப் போட்டு சல்லித்தனங்கள் நடக்கிறது. ஒரு அமைச்சர் அழுகிறார். அதை வீடியோவாக்கிப் போடுகிறார். அதைப் பார்த்து அனைத்து அமைச்சர்களும் அழுது ‘மீம்ஸ்’ போடுகிறார்கள். முக்கியச் சாலைகளில் ஆட்கள் நடமாட முடியவில்லை. வாகனங்கள் செல்ல முடியவில்லை.

**விஜய் என்ற தனிமனிதனின் விளம்பர வெறிக்காக ஒட்டுமொத்தத் தமிழ்நாடும் தியேட்டராக மாற்றப்படுவது கேவலம்! மகா கேவலம்!**

**‘வடக்கு வடக்கு என்று கிண்டலடித்தீர்களே! இப்போது வடக்கு கல்விக்காகப் போராடுகிறது. தெற்கு சினிமா தியேட்டரில் சீரழிகிறது’ என்று சமூக வலைதளங்களில் வரும் விமர்சனத்தைப் படிக்கும் போது அவமானத்தால் துடிக்கிறோம்.**

---

### தமிழ்நாடு முதல்வர் நீட் தேர்வுக்கு எதிரானவர் என்றால்

# மாணவர்கள் போராட்டத்தை அனுமதிக்க வேண்டும்!

## பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ. அறிக்கை!



சென்னை, ஜூலை 25-

மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

டெல்லியில் நீட் தேர்வுக்கு எதிராகவும் ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி விலக கோரியும் மாணவர்கள் முன்னெடுத்து வரும் போராட்டத்திற்கு ஆதரவாக, தமிழ்நாட்டிலும் பல்வேறு மாணவர் அமைப்புகள் அமைதியான ஜனநாயக வழியில் போராட்டங்களை நடத்த முன்வந்துள்ளன. ஆனால், இந்த அமைதிப் போராட்டங்களில் ஈடுபட்ட மாணவர்களை தமிழ்நாடு காவல்துறை கைது செய்து அப்புறப்படுத்தியிருப்பதும், சில இடங்களில் கல்லூரி வளாகங்களுக்குள்ளேயே நுழைந்து மாணவர் இயக்க நிர்வாகிகளை அழைத்து எச்சரித்திருப்பதும் கவலைக்குரிய செய்தியாகும்.

நீட் தேர்வின் கொடூரமான விளைவாக உயிரிழந்த அரியலூர் மாணவி அனிதாவின் இல்லத்திற்குச் சென்று ஆறுதல் கூறியவரும், நீட் தேர்வை கடுமையாக எதிர்த்தவரும் தான் தற்போதைய தமிழ்நாடு முதல்வர். அந்த நிலைப்பாட்டை வெளிப்படையாக முன்வைத்து மக்களின் ஆதரவைப் பெற்றவர், இன்று ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் போது, அதே நீட் தேர்வுக்கு எதிராக ஜனநாயக வழியில் குரல் கொடுக்கும் மாணவர்கள் காவல்துறை நடவடிக்கைகளுக்கு உள்ளாவது பெரும் முரண்பாடாகத் தெரிகிறது.

தமிழ்நாட்டில் மாணவர் போராட்டங்களுக்கு முழுமையாகத் தடை விதிக்கப்படவில்லை; அனுமதியின்றி நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டங்களையே காவல்துறை தடுத்துள்ளது என்று அமைச்சர்கள் விளக்கம் அளித்திருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன. ஆனால் மறுபுறம், மாணவர்கள் தங்களை வலுக்கட்டாயமாக காவல்துறை கைது செய்து அழைத்துச் சென்றதாகவும், போராட்டத்தில் ஈடுபட வேண்டாம் என்று மிரட்டப்பட்டதாகவும் குற்றம்சாட்டியுள்ளனர். இந்த முரண்பட்ட தகவல்கள் அரசின் உண்மையான நிலைப்பாடு குறித்து சந்தேகத்தை ஏற்படுத்துகின்றன.

குறிப்பாக, மாணவர்கள் போராட்டம் நடத்துவதாக அறிவிக்கப்பட்டவுடன் மெரினா கடற்கரை உள்ளிட்ட பகுதிகளில் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டது தேவையற்ற நடவடிக்கையாகவே பொதுமக்கள் கருதுகின்றனர். நீட் தேர்வுக்கு எதிராக தமிழ்நாடு அரசு உண்மையிலேயே உறுதியான நிலைப்பாட்டில் இருக்கிறது என்பதை நிரூபிக்க வேண்டுமெனில், அமைதியான ஜனநாயகப் போராட்டங்களுக்கு அனுமதி அளித்து, மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும்.

ஜனநாயகத்தில் கருத்து வேறுபாட்டை வெளிப்படுத்துவதும், அமைதியான முறையில் போராடுவதும் அரசியலமைப்புச் சட்டம் வழங்கியுள்ள அடிப்படை உரிமையாகும். அந்த உரிமையைப் பாதுகாப்பதே ஜனநாயக அரசின் கடமையாகும்.

எனவே, தமிழ்நாடு அரசு நீட் தேர்வுக்கு எதிராக அமைதியான முறையில் போராட விரும்பும் மாணவர்களுக்கு உரிய அனுமதியையும் முழுமையான காவல் பாதுகாப்பையும் வழங்க வேண்டும் என்று மனிதநேய மக்கள் கட்சியின் சார்பில் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ. அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

### சேமிப்பு – போக்குவரத்து – கையாளுதல் போன்றவற்றில்

# அமோனியா இரசாயனங்களின் நடைமுறைகள் என்ன?

## மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் வினா!



புதுடெல்லி, ஜூலை 25 -

தமிழ்நாட்டின் திருவள்ளூரில் ஏற்பட்ட அமோனியா வாயு கசிவு சம்பவத்தைத் தொடர்ந்து, அமோனியா மற்றும் பிற அபாயகரமான இரசாயனங்களின் சேமிப்பு, போக்குவரத்து மற்றும் கையாளுதல் தொடர்பான பாதுகாப்பு நடைமுறைகள் குறித்து மக்களவையில் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் மக்களவையில் கேள்வி எழுப்பினார்.

இதற்கு ஒன்றிய இரசாயனங்கள் மற்றும் உரங்கள் துறை இணை அமைச்சர் திருமதி. அனுப்ரியா படேல் அவர்கள் எழுத்து பூர்வமாக அளித்த பதில் விவரம் கீழ்வருமாறு:

தொழில்சார் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் பணிச்சூழல் நிபந்தனைகள் சட்டத் தொகுப்பு (OSH&WC Code), 2020 21.11.2025 முதல் அமலுக்கு வந்துள்ளதாகவும், தொழிற்சாலைகள் உட்பட அனைத்து நிறுவனங்களிலும் பணியாளர்களின் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தை உறுதி செய்வதற்கான சட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். மேலும், தொழிற்சாலைகளில் இந்தச் சட்டத்தை அமல்படுத்துவது சம்பந்தப்பட்ட மாநில அரசுகளின் பொறுப்பு என்றும் குறிப்பிட்டார்.

மேலும், தமிழ்நாடு தொழிற்சாலை பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநரகத்தின் தகவலின்படி, அமோனியா கையாளும் தொழிற்சாலைகளில் சிறப்பு ஆய்வுக் குழுக்கள் அமைக்கப்பட்டு தொடர்ந்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், அபாயகரமான இரசாயனங்கள் கையாளப்படும் அல்லது சேமிக்கப்படும் பகுதிகளில் தொழிலாளர்கள் தங்க அனுமதிக்கக் கூடாது என அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாகவும், இதனை கண்காணிக்க சிறப்பு கண்காணிப்புக் குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தனது பதிலில் தெரிவித்துள்ளார்.

---

### முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு ஏற்பாட்டில்

# 10 ஆயிரம் மாணவர்களுக்கு நோட்டுப்புத்தகங்கள்!

## மாநகர மேயர் நிர்மலாவேல்மாறன் தொடங்கி வைத்தார்!

திருவண்ணாமலை, ஜூலை 25 -

முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் திருவண்ணாமலை சட்டமன்ற தொகுதி முழுக்க உள்ள அரசு பள்ளி மாணவர்கள் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டோருக்கு நோட்டு புத்தகங்கள் வழங்க ஏற்பாடு செய்துள்ளார். திருவண்ணாமலை மாநகராட்சியில் மாநகர மேயர் நிர்மலாவேல்மாறன் மாணவர்களுக்கு நோட்டு புத்தகங்கள் வழங்கி தொடங்கி வைத்தார்.

23.07.2026 வியாழன் மாலை 6.00 மணிக்கு திருவண்ணாமலை திருக்கோவிலூர் ரோடு சாரோனில் உள்ள மாவட்ட திமுக அலுவலக வளாகத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு மாணவர்களுக்கு நோட்டு புத்தகங்கள் வழங்கும் விழா நடைபெற்றது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு முன்னாள் அமைச்சரும், சட்டமன்ற உறுப்பினருமான எ.வ.வேலு அவர்கள் திருவண்ணாமலை தொகுதியில் உள்ள தி.மலை மாநகரம், திருவண்ணாமலை மேற்கு, மத்திய ஒன்றியங்கள், தண்டராம்பட்டு கிழக்கு ஒன்றியதிற்குட்பட்ட அரசு பள்ளி மாணவர்கள் 10 ஆயிரம் பேருக்கு நோட்டு புத்தகங்கள் வழங்க ஏற்பாடு செய்துள்ளார். அதை முன்னிட்டு...

விழாவிற்கு மாவட்ட துணைச் செயலாளர் பிரியா விஜயரங்கன் தலைமை வகித்தார்.

துணை மேயர் சு. ராஜாங்கம், பகுதி செயலாளர்கள் சி.சண்முகம், ந. சீனுவாசன், அ. கோவிந்தன், மாநகர நிர்வாகிகள் இல.குணசேகரன், கோல்டு எஸ்.பிரபு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாநகர செயலாளர் ப.கார்த்திவேல்மாறன் அனைவரையும் வரவேற்று பேசினார்.

விழாவில் கலந்து கொண்டு மாணவர்களுக்கு மாநகர மேயர் நிர்மலா வேல்மாறன் நோட்டு புத்தகங்கள், இனிப்புகள் வழங்கி தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார்.

விழாவில் மாநில தொ.மு.ச செயலாளர் க.சௌந்தரராசன், மாநில அமைப்புசாரா பிரச்சார செயலாளர் ஏ.ஏ.ஆறுமுகம், மாவட்ட அமைப்பாளர்கள் டி.வி.எம்.நேரு, காலேஜ் ரவி, கு.கணேஷ், ஏ.டபல்யு சர்தார், பி.கே.ஏ.அருண், கற்பகம் சரவணன், மாவட்ட துணை அமைப்பாளர்கள் ஏ.எம்.பாஷா, இன்பராஜ், ஜீவிதா வைத்தியலிங்கம், எஸ்.சமயராஜ், டி.எம். வெங்கடேசன், மாநகர இளைஞரணி அமைப்பாளர் மண்டி பிரகாஷ், மாமன்ற உறுப்பினர்கள் ம.செந்தில், க.பிரகாஷ், ஹேமா சசிகுமார், பி.ஆர். நகராஜ், சந்திர சேகரன், அருண், வட்ட செயலாளர் ஆனந்தன், கே.வெங்கட், ராஜேந்திரபாபு, டி.எஸ். ஆனந்தன், பழனிராஜ், சாரோன் பாபு, மனோகர், டைலர் காசிநாதன், செந்தில், அரவிந்து உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

### வருகிற 27அன்று - சென்னை மாநகராட்சி

# தி.மு.க. மாமன்ற உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## மாநகராட்சி ஆளுங்கட்சி மன்ற கொறடா எ.நாகராஜன் அறிவிப்பு!

சென்னை, ஜூலை 25-

சென்னை மாநகராட்சி ஆளுங்கட்சிக் கொறடா எ.நாகராஜன் விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:-

பெருநகர சென்னை மாநகராட்சி, தி.மு.க. மாமன்ற உறுப்பினர்களின் ஆலோசனைக் கூட்டம், வருகின்ற 27.07.2026 திங்கட்கிழமை காலை 11.00 மணியளவில் ரிப்பன் கட்டடம் 2வது மாடியில் உள்ள ஆலோசனைக் கூடத்தில், மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர் ந.இராமலிங்கம் தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மேயர் திருமதி.ஆர்.பிரியா மற்றும் துணை மேயர் மு. மகேஷ்குமார் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றவுள்ளார்கள்.

எனவே, மாமன்ற தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரும் இக்கூட்டத்தில் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பொருள்: 29.07.2026 அன்று நடைபெறும் மாமன்றக் கூட்டம் தொடர்பாக.

இவ்வாறு அவர் தனது அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளார்.

---

# தமிழ்நாட்டில் நடப்பது உண்மையில் யாருடைய ஆட்சி?




## தி.மு.க. ஐ.டி.விங் கேள்வி!

சென்னை, ஜூலை 25 -

நீட் தேர்வுக்கு எதிராகத் தங்கள் எதிர்கால நல்வாழ்விற்காக அறவழியில் போராடும் மாணவர்களைச் சற்றும் ஈவிரக்கமின்றி குண்டுக்கட்டாகத் தூக்கிச் சென்று, கெடுபிடி காட்டி கைது செய்கிறது ஆளும் த.வெ.க. அரசின் காவல்துறை!

ஆனால், அதே காவல்துறை, த.வெ.க. கூட்டணியில் உள்ள காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் ராகுல் காந்தி அவர்களுக்கு எதிராகக் காரணமின்றிப் போராடும் பா.ஜ.க.வினருக்கு மட்டும் சிவப்புக் கம்பளம் விரித்துப் பாதுகாப்பு அளித்து, சாவகாசமாகப் போராட அனுமதிக்கிறது!